# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| **I.** | **ஆதி திராவிடர் நலன்** | |
| **1** | கல்வி உதவித்தொகைகள் | 4 |
| **2** | கல்விக் கட்டணச் சலுகைகள் | 11 |
| **3** | மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகைத் திட்டம் | 14 |
| **4** | பரிசுத் தொகை | 15 |
| **5** | கல்லூரியில் சேரும் மாணாக்கர்களுக்கான பரிசுகள் | 20 |
| **6** | விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல் | 24 |
| **7** | சீருடைகள் வழங்குதல் | 24 |
| **8** | புத்தகங்கள் வழங்குதல் | 25 |
| **9** | மிதிவண்டிகள் வழங்குதல் | 25 |
| **10** | சிறந்த தனியார் பள்ளிகளில் **11**–ஆம் வகுப்பில் மாணாக்கர்களை சேர்த்தல் | 26 |
| **11** | சிறந்த தனியார் பள்ளிகளில் மாணாக்கர்களை **6** ஆம் வகுப்பில் சேர்த்தல் | 27 |
| **12** | விடுதிகள் | 28 |
| **13** | தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி | 29 |
| **14** | இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 31 |
| **15** | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 31 |
| **16** | ஈமச்சடங்கு உதவித் தொகை | 32 |
| **17** | ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் | 32 |

| | | |
|---|---|---|
| **18** | சாதிச் சான்றிதழ்கள் | 34 |
| **19** | 1955ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2015ஆம் ஆண்டு SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் | 35 |
| **20** | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 40 |
| **21** | ஆதி திராவிடர் துணைத் திட்டம் | 41 |

| | | |
|---|---|---|
| **II.** | **பழங்குடியினர் நலன்** | |
| | முன்னுரை | 43 |
| | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகள் | 44 |
| | அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் இனம் | 45 |
| **1** | மைய அரசின் உதவித் தொகை | 45 |
| | (அ) பழங்குடியினர் துணைத்திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி | 46 |
| | (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) | 47 |
| | (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 49 |
| | (ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல் | 50 |
| **2** | விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 52 |
| **3** | பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம் | 52 |
| **4** | தொழில் நெறி வழிகாட்டும் மையம் | 53 |

| | | |
|---|---|---|
| **5** | தொழிற்பயிற்சி மையங்கள் | 53 |
| **6** | சாதிச் சான்றிதழ்கள் | 54 |
| **7** | பழங்குடியினர் துணைத் திட்டம் | 57 |

| | | |
|---|---|---|
| **III.** | **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| | முன்னுரை | 59 |
| **1** | பங்கு மூலதனம் | 59 |
| **2** | நோக்கம் | 60 |
| **3** | ஆதி திராவிடர்களுக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் | 60 |
| **4** | தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதி திராவிடர் மகளிர்களுக்கு நிதியுதவி | 70 |
| **5** | பழங்குடியினருக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படம் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் | 71 |
| **6** | திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 74 |
| **7** | கட்டுமானப் பிரிவு | 76 |
| **8** | மத்திய அரசுப் பணிகள் | 76 |
| **9** | மாநில அரசுப் பணிகள் | 77 |
| **10** | நபார்டு திட்டப் பணிகள் | 77 |

| | | |
|---|---|---|
| **IV.** | **2017-18 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடு** | 78 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2017-2018

**முன்னுரை**

அண்மைக்கால கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7.21 கோடியாகும். அதில் ஆதி திராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01%) பழங்குடியினர் மக்கள் 7.95 இலட்சமும் (1.10%) இருக்கின்றனர். இவ்வின மக்கள் சமூகம், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி கருதப்படுகிறார்கள். எல்லா வகையிலும், இவ்வின மக்களை மேம்படுத்துவதே இத்துறையின் குறிக்கோளாகும்.

தமிழ்நாடு அரசின் முற்போக்கான கொள்கைகளாகிய சமுதாய முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, கல்வி அறிவை உயர்த்துதல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்தி அவற்றை அடையும் வகையில் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை தீட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்து செம்மையாக செயல்படுத்துதல் போன்றவை

இத்துறையின் பொறுப்பாகும். இதன் மூலம் இவ்வின மக்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும் அவர்களுக்கு நிரந்தர மேம்பாட்டை உறுதி செய்கின்ற வகையில், இத்துறை செயல்படுகிறது.

பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இம்மக்களின் வளர்ச்சியை உறுதிபடுத்த, 2017-2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ரூ.3281.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## கல்வி

தமிழ்நாட்டில் அண்மைக்கால மக்கள் தொகையின்படி இவ்வின மக்களில் எழுதப் படிக்க தெரிந்தவர்களின் விவரம்

(விழுக்காடு)

| விவரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| மொத்த மக்கள் | 86.77 | 73.44 | 80.09 |
| ஆதி திராவிடர் | 80.94 | 65.64 | 73.26 |
| பழங்குடியினர் | 61.81 | 46.80 | 54.34 |

**இத்துறை பள்ளிகள் மற்றும் மாணாக்கர்களின் விவரம்**

| **வ. எண்.** | **விவரம்** | **எண்ணிக்கை** | **மாணாக்கர் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,134 | 1,06,390 |
| 2 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 314 | 27,652 |
| | **மொத்தம்** | **1,448** | **1,34,042** |

இத்துறைக்கான 2017-2018 ஆம் நிதியாண்டு வரவு–செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.3281.35 கோடியில், ரூ.2935.65 கோடி (89.46 விழுக்காடு) கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# I. ஆதி திராவிடர் நலன்

## 1. கல்வி உதவித்தொகைகள்

### (அ) போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

இத்துறையின் வாயிலாக கல்வி உதவித்தொகை பெறும் மாணாக்கர்கள் பதினொன்றாம் வகுப்பு முதல் உயர் படிப்பினை தொடர்ந்து படித்தால், மேற்கண்ட கல்வி உதவித்தொகை அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின் வழங்கப்படுகிறது.

வெளியில் தங்கி கல்வி நிலையங்களில் படிக்கின்றவர்களுக்கு மாதம் தோறும் குறைந்தபட்சம் ரூ.230/—உம் அதிக பட்சம் ரூ.550/—உம் வழங்கப்படுகிறது.

விடுதியில் தங்கி கல்வி நிலையங்களில் படிப்போர்க்கு குறைந்த பட்சம் மாதம் ரூ.380/—உம் அதிக பட்சமாக ரூ.1200/—உம் அவர்களின் பாடத்திட்டத்திற்கு ஏற்ப பராமரிப்புப்படி மாணாக்கர்களின் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட மாணாக்கர்களுக்காக அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி

நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய மற்றும் திரும்ப வழங்கப்படாத கட்டணங்கள் உதவித்தொகையாக நிறுவனங்களின் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதி கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கும் உதவித்தொகை அவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. மேலும், கல்விக் கட்டணம் கல்வி நிலையங்களின் கணக்குகளில் அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. பராமரிப்புப்படி மாணாக்கர்களின் பாடப்பிரிவிற்கு தகுந்தார்போல் அவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கும் இந்த கல்வி உதவித்தொகை அவர்களின் கணக்குகளிலும், நிறுவனங்களின் கணக்குகளிலும் நேரடியாக இயக்குநரால் செலுத்தப்படுகிறது.

மைய அரசின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2017-2018ஆம் நிதியாண்டில், ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு ரூ.1467.15 கோடியும், பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ரூ.32.26 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை**

மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகை பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், அவர்களின் வங்கி கணக்குகளிலும், கல்வி நிலையங்களின் கணக்குகளிலும், இயக்குநரால் விடுவிக்கப்படுகிறது. வெளியில் தங்கி படிக்கின்ற மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.100/– முதல் ரூ.175/– வரையிலும் செலுத்தப்படுகிறது. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணாக்கர்களுக்கு ரூ.175/– முதல் ரூ.350/– வரையிலும், அவர்களின் பாடப்பிரிவுக்கு ஏற்றார் போல் பராமரிப்புப்படியாக செலுத்தப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் படிப்பைத் தொடரும் மாணாக்கர்கள் செலுத்த வேண்டிய மற்றும் திரும்பப் பெறப்படாத கட்டணங்கள் கல்வி நிலையங்களின் கணக்குகளில் இயக்குநரால் செலுத்தப்படுகிறது.

சுயநிதி கல்லூரிகளுக்கும் மேற்கண்டவாறு பராமரிப்புப்படி மாணாக்கர்களின் வங்கிக் கணக்கிற்கும், கல்லூரி கல்லூாரி கட்டணம் நிறுவனங்களின் கணக்கிற்கும் அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.75.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) மைய அரசின் ப்ரிமெட்ரிக் உதவித்தொகை**

(i) மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிவோரின் குழந்தைகள் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பல்வேறு வகையான பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதர பணிகளாகிய தோல் பதனிடுதல், தோல் உரித்தல், கழிவு பொருட்களிலிருந்து தரமான பொருட்களை பிரித்து சேகரிப்பவர்கள், கழிவு நீரை அகற்றுவோர்கள், ஆகியோரின் குழந்தைகளும் இந்த கல்வி உதவித்தொகையை கல்வி நிலையங்களின் வாயிலாக பெறுவதற்கு தகுதி உடையவர்கள் ஆவர்.

1. **உதவித்தொகை**

   - வெளியில் தங்கி படிக்கும் மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.**110/–**உம்
   - விடுதியில் தங்கி படிப்போர்களுக்கு மாதம் ரூ.**700/–**உம்

   மாணாக்கர்களின் வங்கி கணக்குகளுக்கு அனுப்பப்படுகிறது.

2. **தனி மானியம்**

- வெளியில் தங்கி படிப்போர்களுக்கு வருடம் தோறும் ரூ.750/– உம்
- விடுதியில் தங்கி படிப்போர்க்கு வருடம் தோறும் ரூ.1000/–உம்

மாணாக்கர்களின் வங்கி கணக்குகளுக்கு அனுப்பப்படுகிறது.

இந்த திட்டத்திற்கு 2017-2018ஆம் நிதியாண்டில், ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், கீழ்க்கண்டவாறு உதவித்தொகை அவர்களின் கணக்குகளில் செலுத்தப்படுகிறது.

| **உதவித்தொகை** | **வெளியிலிருந்து பயில்பவர்கள் (ரூ.)** | **விடுதியில் தங்கிப் பயில்பவர்கள் (ரூ.)** |
|---|---|---|
| பராமரிப்புப் படி | 1500 | 3500 |
| தனி மானியம் | 750 | 1000 |
| | 2250 | 4500 |

மேற்கண்ட திட்டத்திற்கென 2017-2018ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு ரூ.113.31 கோடி, பழங்குடியினர்களுக்கு ரூ.1.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை**

கல்வி நிலையங்களுக்கு சொந்தமான விடுதிகளில் தங்கி இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் பல்தொழில் நுட்பப்படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு வருடம் தோறும் ரூ.7500/–உம் தொழில் படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.8000/–உம் சிறப்பு உதவித்தொகை அவர்களின் கணக்குகளில் செலுத்தப்படுகிறது. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.24.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) வெளிநாட்டில் Ph.D. படிப்பதற்கு உதவித்தொகை**

வெளிநாடுகளில், பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில், **Ph.D.** ஆராய்ச்சி படிப்பை

படிக்க விரும்பும் மாணாக்கர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கு நிதியுதவி**

மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை படிக்கின்ற மாணாக்கர்களுக்கு வருடம் தோறும் ரூ.50,000 வீதம் 4 ஆண்டுகளுக்கு (வருடத்திற்கு 700 நபர்கள் வீதம்) அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு இயக்குநரால் அனுப்பப்படுகிறது. பயனாளிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

முனைவர் படிப்பிற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. கல்வி கட்டணச் சலுகைகள்

### (அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயில்கின்ற இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களும் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களும் வருமான வரம்பின்றி கற்பிப்புப் கட்டணம் கல்வி நிலையங்களுக்கு செலுத்துவதிலிருந்து மாநில அரசால் முழுமையாக விலக்களிக்கப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.7.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இளங்கலை மாணாக்கர்களுக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கும் சிறப்பு கட்டணம் மற்றும் தேர்வு கட்டணச் சலுகைகள் வருமான வரம்பின்றி அவர்கள் செலுத்துவதிலிருந்து மாநில அரசால் விலக்களிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) முதுகலை மாணவியருக்கு சலுகைகள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணவியர்களும் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவியர்களும் வருமான வரம்பின்றி சிறப்பு கட்டணம் மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து மாநில அரசால் விலக்களிக்கப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) சிறப்பு கட்டணச் சலுகை**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் இத்துறையைச் சார்ந்த அனைத்து மாணாக்கர்களும், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களும் சிறப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு இந்த கட்டணம் கல்வி நிலையங்களுக்கு நேரடியாக விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.1.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) கட்டணச் சலுகைகள்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களும், கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்களும் தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு மாநில அரசால் பள்ளிகளுக்கு இக்கட்டணம் நேரடியாக விடுவிக்கப்படுகின்றது. ஆங்கில வழியில் பயிலும் மாணாக்கர்களின் தேர்வு கட்டணம் அரசு தேர்வுகள் இயக்குநரகத்துக்கு நேரடியாக அரசால் விடுவிக்கப்படுகின்றது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்விகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் விலக்களிக்கப்பட்டு கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக இக்கட்டணங்கள் விடுவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.2.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

சமுதாய முன்னேற்றத்திற்கு கல்வி மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது. இத்துறையைச் சார்ந்த மாணவியர்களின் இடை நிற்றலை தடுப்பதற்கும் அவர்களின் கல்வி தரத்தை மென்மேலும் உயர்த்துவதற்கும் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும் மாணவியர்களுக்கான கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்துறையைச் சார்ந்த மாணவியர் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படித்தால் அவர்களுக்கு வருடந்தோறும் ரூ.500 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணவிகள் பயன் பெறும் வகையில் ஊக்கத் தொகைத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ. 17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துறையைச் சார்ந்த மாணவிகள் 6 ஆம் வகுப்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சேர்ந்து படித்தால்

அவர்களுக்கு வருடந்தோறும் ரூ.1000 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7 மற்றும் 8 ஆம் வகுப்பு படிக்கும் இத்துறையைச் சார்ந்த மாணவியர்களுக்கு வருடந்தோறும் ரூ.1500 வீதம் 2013-2014 ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.38.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. பரிசுத் தொகை**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று மாநில அளவில் இத்துறையைச் சார்ந்த மூன்று சிறந்த மாணாக்கர்களுக்கும், மாவட்ட அளவில் மூன்று சிறந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கும் மாநில அரசால் இந்தப் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பரிசைப் பெறுவதற்கு வருமான வரம்பு கிடையாது.

**(அ) மாநில அளவிலான பரிசுகள்**

அனைத்து வகையான பள்ளிகளிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் படித்து மாநில அளவில் மூன்று சிறந்த

மாணாக்கர்களுக்கு இந்த பரிசுத்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| வ எண் | வகுப்பு | மாணாக்கர்கள் விவரம் | தகுதி | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | பன்னிரெண்டாம் வகுப்பு | இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வோர் இனத்திலும் மூன்று சிறந்த மாணாக்கர்களில் ஒரு சிறந்த மாணவன் மற்றும் ஒரு சிறந்த மாணவி.<br>2X3X3=18 (மாணாக்கர்கள்) | முதல் மூன்று சிறந்த மாணாக்கர்கள் | **50,000**<br>**30,000**<br>**20,000** |
| 2. | பத்தாம் வகுப்பு | இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வோர் இனத்திலும் மூன்று சிறந்த மாணாக்கர்களில் ஒரு சிறந்த மாணவன் மற்றும் ஒரு சிறந்த மாணவிக்கு.<br>(2X3X3=18 மாணாக்கர்கள்) | முதல் மூன்று சிறந்த மாணாக்கர்கள் | **25,000**<br>**20,000**<br>**15,000** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | பன்னி ரெண்டாம் வகுப்பு (25 சிறந்த மாணாக்கர்கள்) | சிறந்த இத்துறையைச் சார்ந்த மாணாக்கர் களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வோர் இனத்திலும் ஒரு சிறந்த மாணவன் அல்லது ஒரு சிறந்த மாணவிக்கு (1X25X3=75 மாணாக்கர்கள்) | சிறந்த மாணாக்கர் ஒருவருக்கு | **2,000** |
| 4. | பத்தாம் வகுப்பு (ஐந்து சிறந்த மாணாக்கர்கள்) | சிறந்த இத்துறையைச் சார்ந்த மாணாக்கர் களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வோர் இனத்திலும் ஒரு சிறந்த மாணவன் அல்லது ஒரு சிறந்த மாணவிக்கு. (1X5X3=15 மாணாக்கர்கள்) | சிறந்த மாணாக்கர் ஒருவருக்கு | **1,000** |

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 126 மாணாக்கர்கள் பயன் பெறுகின்றனர்.

**(ஆ) மாவட்ட அளவிலான பரிசுகள்**

அனைத்து வகையான பள்ளிகளிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் படித்து மாவட்ட அளவில் மூன்று சிறந்த மாணாக்கர்களுக்கு இந்த பரிசுத்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது. இந்த பரிசுகள் 2014-2015 ஆம் ஆண்டு முதல் அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

**பத்தாம் வகுப்பிற்கு**

| **விவரம்** | **ஒரு மாணாக் கருக்கு வழங்கப்படும் தொகை ரூ.** | **சிறந்த மாணாக்கர் களின் எண்ணிக்கை** | **மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| **முதல் மூன்று சிறந்த மாணாக்கர்கள்** | 3000 | 64 | 1.92 |
| இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் ஒரு மாவட்டத்தில் 1 சிறந்த மாணவன் மற்றும் 1 சிறந்த மாணவி | 2000 | 64 | 1.28 |
| | 1000 | 64 | 0.64 |
| **மொத்தம்** | | **192** | **3.84** |

**பன்னிரெண்டாம் வகுப்பிற்கு**

| **விவரம்** | **ஒரு மாணாக்கருக்கு வழங்கப்படும் தொகை ரூ.** | **பயனாளிகளின் எண்ணிக்கை** | **மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| **முதல் மூன்று சிறந்த மாணாக்கர்கள்** | 6000 | 64 | 3.84 |
| இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் ஒரு மாவட்டத்தில் 1 சிறந்த மாணவன் மற்றும் 1 சிறந்த மாணவி | 4000 | 64 | 2.56 |
| | 2000 | 64 | 1.28 |
| **மொத்தம்** | | **192** | **7.68** |

**(இ) மாநில அளவில் இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கு பரிசுகள்**

இத்துறையைச் சார்ந்த அரசு பள்ளிகளில் படித்த மாணாக்கர்கள் மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் ஒவ்வோர் இனத்திலும் மாநில

அளவில் 3 சிறந்த மாணாக்கர்களுக்கு, ஒரு சிறந்த மாணவன் அல்லது ஒரு சிறந்த மாணவிக்கு, 2014-2015 ஆம் ஆண்டு முதல் பரிசுகள் அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

| **பரிசுகள்** | **தொகை** | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
| முதல் மூன்று சிறந்த மாணாக்கர்கள் | ரூ.25000 | ரூ.50000 |
| | ரூ.20000 | ரூ.30000 |
| | ரூ.15000 | ரூ.20000 |

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 18 மாணாக்கர்கள் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்திற்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. கல்லூரியில் சேரும் மாணாக்கர்களுக்கான பரிசுகள்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயின்ற இத்துறை மாணாக்கர்கள் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் போது இப்பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**(அ) முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று 12 ஆம் வகுப்பில் சிறந்த இத்துறை மாணாக்கர்கள் மற்றும் மதம் மாறிய கிறித்துவர்களில் 1000 சிறந்த மாணவர்கள் மற்றும் 1000 சிறந்த மாணவியர்களுக்கு கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.3000 வீதம் 5 ஆண்டுகளுக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத் தொகை**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று 12 ஆம் வகுப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு சிறந்த மாணவன் மற்றும் ஒரு சிறந்த மாணவி இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இந்த பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.2000 ஆகவும், அடுத்த ஐந்து வருடங்களுக்கு ரூ.1500 வீதமும் வழங்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் குறைந்த பட்சம் 64 புதிய மாணாக்கர்கள் பயனடைகின்றனர்.

இத்திட்டத்திற்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) தகுதி வழிவகைப் பரிசுத் தொகை**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று 12 ஆம் வகுப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மதம் மாறிய கிறித்துவ சிறந்த மாணவர் ஒருவருக்கும், சிறந்த மாணவி ஒருவருக்கும், பழங்குடியின சிறந்த மாணவர் ஒருவருக்கும், சிறந்த மாணவி ஒருவருக்கும் இத்திட்டத்தின் கீழ் மாணாக்கர் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.2000 உம், அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஒவ்வோராண்டும் ரூ.1500 வீதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) கல்லூரியில் 60 விழுக்காடு மதிப்பெண் பெறும் மாணாக்கர்களுக்கு பரிசுகள்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, தொழில் நுட்ப படிப்பு ஆகிய படிப்புகளில் சிறந்து விளங்கும் இத்துறை மாணாக்கர்கள் மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பிற்கு ரூ.3000-உம் முதுகலைப் பட்டப்படிப்பிற்கு ரூ.5000-உம், தொழிற்கல்வி படிப்பிற்கு ரூ.6000-உம் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் ரூ.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) சிறந்த திறம் மிக்க மாணாக்கர்களுக்கான பரிசு (Bright Students)**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் சிறந்து விளங்கும் இத்துறை சிறந்த மாணாக்கர்கள் இருவரும் மற்றும் மதம் மாறிய கிறித்துவ சிறந்த மாணாக்கர் இருவரும் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு இப்பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.1600 ஆகவும், அடுத்த ஐந்து வருடங்களுக்கு வருடந்தோறும் ரூ.2000–உம் வழங்கப்படுகிறது.

## 6. விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. சீருடைகள் வழங்குதல்

ஒன்றாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை இத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு சமூக நலத்துறையால் சீருடைகள் தைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக வழங்கப்படுகின்றன. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை இதே பள்ளியில் படிக்கின்ற மாணாக்கர்களுக்கு தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் அளவு எடுக்கப்பட்டு சீருடைகள்

தைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக வழங்கப்படுகின்றன. இத்துறை விடுதிகளில் தங்கி பல்வேறு பள்ளிகளில் படிக்கின்ற மாணாக்கர்களுக்கு தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் அளவு எடுக்கப்பட்டு சீருடைகள் தைத்து விடுதி காப்பாளர் அல்லது காப்பாளினி வழியாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. புத்தகங்கள் வழங்குதல்**

புதிதாக தொடங்கப்படும் பள்ளி விடுதிகளுக்கு அங்கு தங்கிப் படிக்கின்ற மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக அனைத்து வகையான புத்தகங்கள் வாங்கி வழங்கப்படுகின்றன. புதிய கல்லூரி விடுதிகளுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து வகையான புத்தகங்கள் வாங்கி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் ரூ.12.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. மிதிவண்டிகள் வழங்குதல்**

அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில்

11 ஆம் வகுப்பு பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும், மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கும், 11 ஆம் வகுப்பில் விடுபட்ட மாணாக்கர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.69.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கர்களை சேர்த்தல்**

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் படித்து மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் சிறந்து விளங்கும் இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்கள் மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டு தோறும் ஒரு மாணாக்கருக்கு ரூ.28000 செலவிடுகிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இணையதளத்தின் வாயிலாகவும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலும் இத்துறையைச் சார்ந்த 10 சிறந்த மாணாக்கர்களின் பட்டியலைப் பெற்று விவரங்களை தெரிவு செய்து அதே மாவட்டத்திலுள்ள அல்லது

அருகில் உள்ள மாவட்டங்களில் சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ப்பித்து அதற்கான கல்வி உதவித் தொகை அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

ஒவ்வோர் ஆண்டும், தமிழ்நாடு முழுவதும் 320 மாணாக்கர்கள் இத்திட்டத்தின் வாயிலாக பயன் பெறுகிறார்கள். வருட வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. சிறந்த தனியார் பள்ளிகளில் மாணாக்கர்களை 6 ஆம் வகுப்பில் சேர்த்தல்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்கும் மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்களுக்கும் 5 ஆம் வகுப்பு முடிக்கின்ற போது பள்ளிக் கல்வித் துறையால் தேர்வு நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்கள் அதே மாவட்டத்தில் உள்ள அல்லது அருகில் உள்ள மாவட்டத்தில் இருக்கின்ற சிறந்த தனியார் பள்ளிகளில் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களால் 6 ஆம் வகுப்பில் சேர்ப்பிக்கப்படுகின்றனர். ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒரு மாணாக்கர் தெரிவு செய்யப்பட்டு சிறந்த பள்ளியில்

சேர்ப்பிக்கப்படுகிறார். அந்த தனியார் பள்ளி நிர்வகிக்கும் விடுதியில் சேர்ந்து படிப்பதற்கு உதவித் தொகை இத்துறையால் விடுவிக்கப்படுகிறது. உதவித் தொகை **6** ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து படிப்பதற்கு வழங்கப்படுகிறது.

## 12. விடுதிகள்

இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் இத்துறையைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு இத்துறையால் விடுதிகள் நிர்வகிக்கப்படுகின்றன. மாணாக்கர்களின் உபயோகத்திற்காக பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:–

| வ. எண். | விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகள் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் நல விடுதிகள் | 1,324 | 98,539 |
| 2. | பழங்குடியினர் நல விடுதிகள் | 42 | 2,782 |
| 3. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 314 | 27,652 |
| | **மொத்தம்** | **1,680** | **1,28,973** |

## 13. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

இத்துறையின் கீழ் இயங்கும் 36 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகளில் 4977 ஆதி திராவிடர் மாணாக்கர்களும், 827 பழங்குடியின மாணாக்கர்களும் பயன் பெறும் வகையில் உணவுக் கட்டணம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கர்களுக்கும் பல்வகை செலவினம் மற்றும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகிறது.

### (i) முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை பள்ளிகள்:

தூத்துக்குடி மாவட்டத்தில் இயங்கி வரும் முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை பள்ளியில், ஆதி திராவிடர் மாணாக்கர்கள், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 4044 பேர் பயில்கின்றனர். இந்த அறக்கட்டளைக்கு 2006 ஆம் ஆண்டு முதல் சம்பளம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2016-17ஆம் நிதியாண்டில், 109 ஆசிரியர் பணியிடங்களுக்கு அரசால் ரூ.5.24 கோடி சம்பளம் அரசால் மானியமாக வழங்கப்பட்டது.

மேலும், 2017-2018 முதல் 18 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு மானியம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

**விடுதிகள்:**

இதே அறக்கட்டளை விடுதியில் 3500 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். 2014-2015 ஆம் நிதியாண்டு முதல், காப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவாளர் என **32** பணியாளர்களுக்கு சம்பளம் தோராயமாக ஆண்டுக்கு ரூ.1.39 கோடி விடுதிப்பணியாளர் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**(ii) எஸ்.எப்.ஆர்.டி (S.F.R.D) தொண்டு நிறுவனம்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு எஸ்.எப்.ஆர்.டி (S.F.R.D) தொண்டு நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. இந்த தொண்டு நிறுவனத்தில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 2159 மாணாக்கர்கள் பயில்கின்றனர். 2005 ஆம் ஆண்டு முதல் சம்பளம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில், 36 ஆசிரியர்களுக்கும் 7 ஆசிரியர்

அல்லாத பணியிடங்களுக்கும் ரூ.1.91 கோடி சம்பளம் அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**14. இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்**

இத்திட்டத்தின் கீழ் வீடற்ற இத்துறையைச் சார்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலங்கள் தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது ஆதி திராவிடர் நல திட்டங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978)–இன்படியோ நில எடுப்பு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பயன்பெற பயனாளியின் வருட வருமானம் ரூ.72,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2017–2018 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி**

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருவதுடன் நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளும் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடும் இணைப்புச்சாலை வசதிக்கு 10 விழுக்காடு செலவினத்தையும் இத்துறை ஏற்கிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16. ஈமச்சடங்கு உதவித்தொகை**

இத்துறையைச் சார்ந்தோர் மற்றும் கிறித்துவ மதம் மாறியோர் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.2,500/-வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்**

ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டங்களை, மேலும் பயனுள்ளதாக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உள்ள தடைகளைக்

களையவும், ஊக்குவிக்கவும் மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத்திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் இத்திட்டத்திற்கு மைய அரசு 100 விழுக்காடு மானியம் வழங்குகிறது. ஆதி திராவிடர் மக்களின் உற்பத்தித்திறன் மற்றும் வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நிதி உதவி வழங்கப்படுகிறது.

வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்க 10 விழுக்காடு நிதி உபயோகப்படுத்தப்படுகிறது.

மீதமுள்ள 10 விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் இடங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ஆதி திராவிடர் நலத்துறைக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. சாதிச் சான்றிதழ்கள்

(i) ஆதி திராவிடர்களுக்கான சாதிச்சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(ii) ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

**மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் | ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதி மன்றத்திலும், கூறு 136–இன்படி உச்ச நீதி மன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2 | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | உறுப்பினர் செயலர் | |
| 3 | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

**19. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015.**

**(அ) தீண்டாமை ஒழிப்பு**

SC மற்றும் ST மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு SC மற்றும் ST (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம் 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள் 2016 போன்றவை மைய அரசால் இயற்றப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம் 2015 மற்றும் திருத்த விதிகள் 2016 ஆகியவை முறையே 01.01.2016 மற்றும் 14.04.2016 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

மேற்படி சட்டத்தை அமல்படுத்துவற்கென கூடுதல் காவல்துறைத் தலைவர், தலைமையின் கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின் கீழ் (i) வழக்குகளைப் பதிவு செய்தல், விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) SC மற்றும் ST மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

**சிறப்பு நீதிமன்றங்கள்**

SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 6 சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. இதர மாவட்டங்களில், தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு, இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 38 நடமாடும் காவல் குழுக்கள், ஒவ்வொன்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் கீழ் ஒரு காவல் துணை கண்காணிப்பாளருடனும் அல்லது மாநகர காவல் ஆணையரின் கீழ் ஒரு காவல் உதவி ஆணையருடனும் இதர

பணியாளர்களுடன் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் செயல்பட்டு வருகின்றன.

1995 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட SC மற்றும் ST மக்களுக்கான வன்கொடுமைத் தடுப்பு விதிகளில் விதி எண்.17(1)இன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. SC மற்றும் ST மக்களின் பிரச்சனைகளை அறிந்த நல்ல நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் ஆய்வு செய்கிறது. மேலும், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்யவும், மேற்பார்வையிடவும் மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

SC மற்றும் ST (வன்கொடுமை தடுப்பு) விதிகள் **1995–**இன் விதி 17–இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், 08.11.2013 நாளிட்ட மைய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு உட்கோட்டத்திலும், உட்கோட்ட நீதிபதியின் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்ட உட்கோட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்க, அரசு ஆணை (நிலை) எண்.6, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 20.01.2015-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு, உட்கோட்ட நிர்வாகத்திடமிருந்து வரப்பெற்ற இந்தச் சட்டத்தின்படியான பல்வேறு அறிக்கைகளை ஆய்வு செய்யும்.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.11.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தீண்டாமையை பின்பற்றினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்புத் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்

வகையில் குறுந்திரைப் படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும், அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 26 முதல் 30 ஆம் தேதி வரை, பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. மனிதநேய வார விழா நடத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50,000/-உம், மாநில அளவில் ரூ.1,00,000/-உம் வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டு கலைஞர்கள் மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்ய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

தீண்டாமை ஒழிப்பு குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க 2 விளம்பரப் பிரிவுகள், ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.91.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னையைத் தவிர) தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில், ரூ.3.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்**

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் இத்துறை கலைஞர்களை ஊக்குவிக்கவும் அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது. அதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகை தெரிவு செய்யப்படும் சிறந்த

எழுத்தாளர்களுக்கு, பரிசுத் தொகையாக வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும், இத்துறையைச் சேர்ந்தோர், கிறித்துவ மதம் மாறியோர் 10 எழுத்தாளர்கள் மற்றும் பிற சமுதாயத்தைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் ஆக மொத்தம் 11 எழுத்தாளர்கள் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நூல்களை வெளியிட ரூ.40,000 பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

## 21. ஆதி திராவிடர் துணைத் திட்டம்

ஆதிதிராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981–இலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மக்களின் சமூக–பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில், தமிழ்நாட்டின் ஆதிதிராவிடர் மக்கள் தொகைக்கு (20.01%) இணையாக மாநில மொத்த திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer)

அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்டங்கள் அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதிதிராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 38 துறைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதிதிராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாநில 2017-2018 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.54,564.19 கோடியில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தில் (ஆதிதிராவிடர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Castes welfare) ரூ.11,627.43 கோடி (21.31 விழுக்காடு) ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் இன மக்கள் தொகை 20.01 விழுக்காட்டை விட அதிகமானதாகும்.

## II. பழங்குடியினர் நலன்

**முன்னுரை**

பழங்குடியினரின் நலனைப் பேணிக்காப்பதற்கென பழங்குடியினர் நல இயக்குநரகம் 01.04.2000-இல் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் பழங்குடியினர் மக்கள் தொகை 10,000-இக்கும் கூடுதலாக உள்ளது.

ஏழ்மைச் சூழ்நிலையில் வாழும் நிலை, மலைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் குறைவு, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், பள்ளி படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைந்த எழுத்துப்படிப்பு வீதம், வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல் ஆகிய அம்சங்களில் இவ்வரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகள் (ITDP)**

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைக் கொண்ட சேலம் (ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை), நாமக்கல் (கொல்லிமலை), விழுப்புரம் (கல்ராயன்மலை), திருவண்ணாமலை (ஜவ்வாதுமலை), திருச்சிராப்பள்ளி (பச்சமலை), தர்மபுரி (சித்தேரி மலை) மற்றும் வேலூர் (ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை) ஆகிய 7 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப்பகுதிகளில், பழங்குடியினர் மக்களுக்கான நலத் திட்டப் பணிகளை செயல்படுத்திட 7 மாவட்டங்களில் திட்ட அலுவலகங்களை திறந்து செயல்பட, அரசாணை (நிலை) எண்.34 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, (ஆதிந–1) துறை, நாள்.25.04.2017–இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் இனம் (PVTG)

மக்கள் தொகை அடிப்படையில் பழங்குடியினரை இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் ஒரே இடத்தில் அதிகமாக காணப்படும்போது, அவர்களைப் பழங்குடியினர் குழுவாகவும், மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படும் ஏனைய பழங்குடியினர், பரவி வாழும் பழங்குடியினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாநிலத்திலுள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடா, கோத்தா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் இனத்தவரின் மக்கள் தொகை குறைந்து கொண்டோ அல்லது அதிகரிக்காமல் நிலையாகவோ உள்ளது. எனவே, இவ்வினத்தவர், அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

### 1. மைய அரசின் உதவித் தொகை

மைய அரசு (i) பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு மத்திய உதவி (ii) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) இன் கீழ் ஒதுக்கீடு மற்றும் (iii) அழிவின் விளிம்பிலுள்ள

பண்டைய  பழங்குடியினருக்குச் சிறப்பு ஒதுக்கீடு ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கி வருகிறது.

**(அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி**

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 60 விழுக்காடு நிதி, வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30 விழுக்காடு நிதி அதே பகுதியில் வருவாய் ஈட்டும் தொழில்களுக்குண்டான உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின குழுக்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்படுவதுடன், சில பொருளாதார திட்டங்களுக்காகவும், இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. 10 விழுக்காடு நிதி வேலைவாய்ப்பு பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியின மக்களுக்கு பயன் தரும் வகையில் “பாக்கு பலவிதம்” பயிற்சி சேலம் மாவட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2017–இல், சேலம் மாவட்டம் கருமந்துறையில் 5 அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் கறவை மாடுகளை பராமரிக்கவும், பேணிக்காக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும்

ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (ITDA) மாவட்டங்களில் “பசு பராமரிப்பு”,“பாரம்பரிய சமையல்”, “மூங்கில் மூலதனம்” ஆகிய பயிற்சிகள் நடப்பு ஆண்டில் நடத்தப்பட உள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில், “அப்துல்கலாம்புரம்” என புதியதாக வினைத்திறமிக்க நகரம் (Smart City) அமைக்கப்பட்டு அக்டோபர் 2016 முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காக அரசு ரூ.1.59 கோடி விடுவித்துள்ளது.

உதகை மாவட்டம் கூடலூர் மற்றும் குன்னூர் ஆகிய இடங்களில் பழங்குடியினர் நல திட்டங்களை செயல்படுத்துவதற்காக தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் புதியதாக துவங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018ஆம் நிதியாண்டில் ரூ.6.51 கோடி உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)**

இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) இன் கீழ், மைய அரசால் வழங்கப்பட்ட நிதியுதவியிலிருந்து பழங்குடியினர்

பகுதிகளில் உட்கட்டமைப்புப் பணிகள், அதாவது நடைமேம்பாலம், இணைப்புச் சாலைகள், மின் இணைப்பு, தடுப்பணை ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், சேலம் மாவட்டத்தில் அபிநவம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமலை ஆகிய இடங்களிலுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பராமரிப்பதற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. வனங்களில் குடியிருப்போர் சட்டம் 2006 ஆம் ஆண்டு அமலுக்கு வந்ததைச் செயல்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே இயங்கிவரும் விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலை, சேலம் மாவட்டம் அபிநவம் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், 2016-2017-இல் துவங்கப்பட்ட திருவண்ணாமலை மாவட்டம் அத்திப்பட்டு மற்றும் நீலகிரி மாவட்டம் நஞ்சநாடு ஆகிய இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நஞ்சநாடு மற்றும் அத்திப்பட்டு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நஞ்சநாடு உண்டி உறைவிடப் பள்ளி மற்றும் விடுதிக்கு உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் 20 ஏக்கர் நிலத்தில்

நிரந்தர கட்டடம் கட்டிட பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது. முதன் முறையாக இத்துறையில், நஞ்சநாடு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியில் தேசிய மாணவர் படை (NCC) பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அறிவுத்திறன் வினைத்திறன் வகுப்புகள் (Smart Classes) துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் நீராவி கொதிகலன், மழை மேலங்கி, தட்டு, டம்ளர் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கிட படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டிற்கு ரூ.16.72 கோடி உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

### (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மைய அரசு

2013–2014 ஆம் ஆண்டு முதல் ரூ.20 கோடி தொகையினை வருடந்தோறும் வழங்கி வருகிறது.

பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் போன்ற வசதிகள் இந்நிதியின் வாயிலாக செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018ஆம் நிதியாண்டில் ரூ.20 கோடி உத்தேச நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்**

மைய அரசு, 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13.12.2005 ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினருக்கும், 13.12.2005 ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக வனங்களில் குடியிருக்கும் பிற மரபு வழியினருக்கும் வன உரிமைப் பட்டா வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் செயல்பாடு பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது :

i) தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு

ii) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு

iii) வருவாய் கோட்ட அலுவலரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு

வன உரிமைப் பட்டா வழங்குவதற்கு எதிராக, திரு. வி. சாம்பசிவம், இ.வ.ப.,(ஓய்வு) என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்த வழக்கு எண்.4533/2008-இன் மீதான தடையாணையை விலக்க 2015ஆம் ஆண்டில் பழங்குடியினர் நல இயக்குநரால் உச்சநீதிமன்றத்தில் ஊடுபிணைப்பு மனு (Interlocutory Application) தாக்கல் செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றம் மேற்படி வழக்கில் 02.02.2016 அன்று உயர்நீதிமன்றத் தடையாணையினை நீக்கி தீர்ப்பாணை வழங்கியது. பயனாளிகள் குடியிருக்கும் வன நிலங்களை குறிப்பிட்ட பூகோள தரவின் அடிப்படையில் 2620 (தனி நபர் உரிமை – 2551, சமூக உரிமை – 69)

பயனாளிகளுக்கு தனிநபர் உரிமை மற்றும் சமூக உரிமை வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வுரிமைகளை 12 மாவட்டங்களில் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2. விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2017-2018 ஆம் ஆண்டு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், பழங்குடியினர் நல மேம்பாட்டு பணிகள், கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர இத்திட்டத்தின் கீழ் 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 3. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், பழங்குடியினர் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி,

சமூக–பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை முதலியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகவும், மைய அரசின் நிதியுதவியுடன் 1983 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், முத்தோரை பாலாடா என்ற இடத்தில் "பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்" ஒன்று அமைக்கப்பட்டது. இம்மையம், மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நூலகம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளன. பழங்குடியினரின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியவை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது பழங்குடியின மக்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒரு விற்பனைக் கூடமும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

**4. தொழில்நெறி வழிகாட்டும் மையம்**

பழங்குடியின இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில், தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

**5. தொழிற்பயிற்சி மையங்கள் (ITIs)**

பழங்குடியினருக்கென தொழிற்பயிற்சி மையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துரை, நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை,

திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரதூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**6. சாதிச் சான்றிதழ்கள்**

(i) பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய்க் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியர் மற்றும் சென்னையில், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கும்பட்சத்தில் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம். பழங்குடியினர் சாதிச்சான்று வழங்க மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவில் இறுதி மேல்முறையீடு செய்யலாம்.

(ii) பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாநில அளவிலான கூர்நோக்குக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

**மாநில அளவிலான கூர்நோக்குக் குழு**

<table>
<tr><td>1</td><td>அரசு முதன்மைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை</td><td>தலைவர்</td><td rowspan="3">பழங்குடியினர் என வழங்கப் பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந் தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதி மன்றத்திலும், கூறு 136–இன்படி உச்ச நீதி மன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>இயக்குநர், பழங்குடியினர் நலன்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

**கண்காணிப்புப் பிரிவு**

பழங்குடியினர்களின் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிய கள ஆய்வு செய்து, வாக்குமூலங்கள், ஆவணங்களைப் பெற்று சரிபார்த்து மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக கீழ்க்கண்டவாறு நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன:

1. **சென்னை மண்டலம்:** சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

2. **சேலம் மண்டலம்:** சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

3. **திருச்சிராப்பள்ளி மண்டலம்:** திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

4. **மதுரை மண்டலம்:** மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

ஒவ்வொரு கண்காணிப்புப் பிரிவும் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது :–

| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | முதுநிலை காவல் துறை துணை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர் | 1 |
| 3. | காவலர் | 1 |

மாநில அளவிலான கூர்நோக்குக் குழு இவ்வினங்களைச் சம்மந்தப்பட்ட கண்காணிப்புப் பிரிவுக்குச் சாதி மெய்த்தன்மை அறியும் பொருட்டு அனுப்புகின்றது.

**7. பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-77ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது. இத்துணைத் திட்டத்தின்படி பழங்குடியினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் மக்கள் தொகை 1.10 விழுக்காட்டிற்கு குறையாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் (Nodal Department) இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். இத்துணைத் திட்டங்களை மாவட்ட அளவில் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர் கண்காணிப்பு அலவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

35 துறைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம், பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

பழங்குடியினர் துணைத்திட்டத்தின் (பழங்குடியினர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Tribes welfare) கீழ் 2017-18ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.54,564.19 கோடியில், ரூ.607.50 கோடி (1.11 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடி மக்கள் தொகை விழுக்காட்டை காட்டிலும் அதிகமாகும்.

## III. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

**முன்னுரை**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு தீப்பிடிக்கா வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச் சட்டம், 1956இன் கீழ் நிறுவப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களும் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**1. பங்கு மூலதனம்**

இக்கழகம் ரூ.1 கோடி பங்கு மூலதனத்துடன் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.150 கோடி மற்றும் ரூ.141.53 கோடி ஆகும். 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் பங்கு மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51 : 49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும். மைய அரசின் பங்குத் தொகை 2003–2004 ஆம் ஆண்டு முதல் 2016–2017 ஆம் ஆண்டு

வரை ரூ.44.59 கோடி பெற வேண்டியுள்ளது. கடன் சுமையிலிருந்த இந்நிறுவனத்தை தமிழ்நாடு அரசு 2003-2004 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரையிலான மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.46.41 கோடியினை வழங்கியதன் மூலம் இக்கழகத்திற்குப் புத்துயிர் வழங்கியுள்ளது.

**2. நோக்கம்**

1. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்
2. பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துதல்
3. திறன் வளர்க்கும் பயிற்சி அளித்தல், போட்டித் தேர்வுகள் மற்றும் உயர்கல்வி தேர்வுகளுக்குப் பயிற்சி அளித்தல்

**3. ஆதி திராவிடர்களுக்காக தாட்கோவினால் செயற்படுத்தப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்**

சமூக ஏணியில் அடித்தட்டில் மிக வறிய நிலையில் உள்ள இத்துறை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு பல சீரிய முயற்சிகள் மேற்கொண்டாலும், ஆதிதிராவிட மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்திற்குமிடையே உள்ள இடைவெளியானது அதிகமாகவே காணப்படுகிறது. இவ்விடைவெளியினைக் குறைக்க பல்வேறு

சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாக ஆதிதிராவிடர் மக்கள், பல்வேறு பொருளாதார திட்டங்களுக்காக 2011-2012 ஆம் ஆண்டு வரை தனி நபருக்கு வழங்கி வந்த மானியத் தொகை ரூ.25,000/—ஐ, ரூ.2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மானியத் தொகை உயர்வானது ஆதிதிராவிடர் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.135 கோடி மானியமாக வழங்க செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**(i) நிலம் வாங்கும் திட்டம்**

ஆதிதிராவிடர் சமூகத்தின் நில உடமையினை அதிகரிக்கவும், நில உடமை மகளிரது சமூக நிலை உயர்வினை காட்டும் அளவு கோல் என்பதாலும் மகளிருக்கான சிறப்புத் திட்டமான நிலம் வாங்கும் திட்டம் 2004-2005 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**(ii) நிலம் மேம்பாட்டுத்திட்டம்**

ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதன் மூலம் நில பயன்பாடு மற்றும்

நிலத்தின் வழி வருவாயை பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018ஆம் ஆண்டில் மொத்தம் 2198 பயனாளிகளுக்கு ரூ.17.37 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

ஆதிதிராவிடர் மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதிதிராவிடர்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கல்வித் தகுதி வலியுறுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 4348 பயனாளிகளுக்கு, ரூ.78.25 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(iv) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்**

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மக்கள், எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே 'அ' மற்றும் 'ஆ' வகைபாட்டில் (A & B Category) பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத்தொகைக்காக நிதியுதவி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் இயக்க மூலதனத்திற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும் பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 5 இளைஞர்களுக்கு ரூ.11.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(v) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த மற்றும் விருப்பமான தொழில் செய்ய நிதி உதவி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 1000 இளைஞர்களுக்கு ரூ.18 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(vi) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார் தொழில்களுக்கான சிறப்பு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) ஆகிய பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம், ஆய்வகம் மற்றும் மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் மருத்துவம் சார் தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுனர், மருந்தாளுனர், கண் கண்ணாடி விற்பவர் மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் சொந்தமாக மருத்துவ மையம், ஆய்வகம் மற்றும் மருந்தகம் அமைப்பதற்கும்

விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் தகுதி வாய்ந்த ஆணையக்குழுவில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 28 நபர்களுக்கு ரூ.42 இலட்சம் நிதியுதவிஅளிக்கப்படவுள்ளது.

**(vii) சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி**

குறு சிறு தொழில் நிலையங்களை உயர்த்தி வறுமை ஒழிப்பு நோக்கோடு, ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மகளிர் சுய உதவி குழுக்கள், ஆடவர் சுய உதவி குழுக்கள், மகளிர் மற்றும் ஆடவர் கலப்பு சுய உதவி குழுக்கள், திருநங்கைகள் சுய உதவி குழுக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவி குழுக்கள் போன்ற சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் குழுக்களுக்கு ஒரு முறை மானியத் தொகையாக ரூ.25,000/– வழங்கப்படும். வங்கிகள் ரூ.50,000/– கடனுதவி வழங்கும். இத்தொகை குழுவின் கட்டமைப்பு நிதியினை மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 300 குழுக்களைச் சார்ந்த 4500 உறுப்பினர்களுக்கு ரூ.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(viii) சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை மேம்படுத்த குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்ய வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மகளிர் சுய உதவி குழுக்கள், ஆடவர் சுய உதவி குழுக்கள், மகளிர் மற்றும் ஆடவர் கலப்பு சுய உதவி குழுக்கள், திருநங்கைகள் சுய உதவி குழுக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவி குழுக்கள் போன்ற சுய உதவி குழுக்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. குழுக்கள் திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் 50 விழுக்காடு திட்டத்தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 5250 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற 350 குழுக்களுக்கு ரூ.8.75 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(ix) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி**

இந்திய குடிமைப் பணியில் ஆதி திராவிடர்களின் பங்களிப்பினை உயர்த்தும் வண்ணம் இந்திய குடிமைப்பணி முதல் நிலைத் தேர்வில் (Preliminary Examination) தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 100 பேருக்கு ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(x) தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதியுதவி**

தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி-1 மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். இந்தத் தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு தலா ரூ.50,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 50 நபர்களுக்கு ரூ.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(xi) இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி**

தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் பயின்ற, 25 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் மற்றும் மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் ரூ.50,000/– நிதியுதவி ஒரு முறை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 500 சட்ட பட்டதாரிகளுக்கு ரூ.2.50 கோடி நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

**(xii) பட்டயக் கணக்கர் மற்றும் செலவுக் கணக்கர்கள் சுயமாகத் தொழில்புரிய நிதி உதவி**

பட்டயக் கணக்கர் மற்றும் செலவுக் கணக்கர்களைச் சுயமாகத் தொழில் செய்வதற்கு ஊக்குவிப்பதற்காக தலா ரூ.50,000/– மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 10 பட்டயக் கணக்கர் மற்றும் செலவுக் கணக்கர்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

### (xiii) தாட்கோ தலைவர் / மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி

மிகவும் நலிந்த நிலையில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி, ஆரம்ப கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், சாதி கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் தகுதிவாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டு 200 பேருக்கு, ரூ.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

### (xiv) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

மாற்று திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், 40 வயதிற்கு மேல் திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள், இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பெற்று, தலா ரூ.20,000/– வரை மாவட்ட ஆட்சியர் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 262 நபர்களுக்கு ரூ.52.27 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**(xv) துரித மின் இணைப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப 2016–2017 ஆம் நிதியாண்டில் துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் ஒரு இணைப்புக்கான கட்டணம், ரூ.75,000/– என்ற வீதத்தில் 1000 ஆதி திராவிட விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**4. தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதிதிராவிடர் மகளிர்களுக்கு நிதியுதவி**

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள ஆதிதிராவிட மகளிர்களுக்கு நவீன தையல் இயந்திரம் வழங்கிட தையல் இயந்திர விலையில் 30 விழுக்காடு மானியமும், சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து எஞ்சிய 70 விழுக்காடு விளிம்புக் கடனாகவும், தாட்கோ பங்கு மூலதனத்திலிருந்து 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது.

## 5. பழங்குடியினருக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

பழங்குடியினரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூ.16 கோடி மானியமாக வழங்க செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தனி நபர் திட்டங்களுக்கு திட்டத் தொகையில் 50 சதவீதம் குறைந்தபட்சமாக ரூ.3.75 இலட்சம் அதிகபட்சமாக ரூ.5.50 இலட்சம் தாட்கோ மூலம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

### i. நிலம் மேம்பாட்டுத் திட்டம்

நிலம் வைத்திருக்கும் பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த இத்திட்டத்தின் வாயிலாக சிறு பாசனம், கிணறு வெட்டுதல் மற்றும் மின் மோட்டார் அமைத்து நீர் வளம் மற்றும் நில வளம் மேம்படுத்த 50% மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுகிறது.

### ii. துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒரு இணைப்புக்கான கட்டணம் ரூ.75,000/– என்ற வீதத்தில் பழங்குடியின விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் மொத்தம் 250 பயனாளிகளுக்கு ரூ.1.88 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**iii. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடியினர் மக்களை தொழிலாளர் நிலையில் இருந்து, தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில், 18 வயது முதல் 65 வயது வரை உள்ள பழங்குடியினருக்கு பல்வேறு தொழில் துவங்க நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் மொத்தம் 288 பயனாளிகளுக்கு ரூ.10.80 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**iv. பழங்குடி இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட பழங்குடி இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த மற்றும் விருப்பமான தொழில் செய்யவும், ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள பழங்குடி இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் மற்றும் ஈப்பு வாங்குவதற்கும் நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 56 இளைஞர்களுக்கு ரூ.2.24 கோடி நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**v. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி**

பழங்குடியினரை உறுப்பினர்களாகக் கொண்ட பெண்களுக்கான சுய உதவி குழு, ஆண்களுக்கான சுய உதவி குழு, இருபாலர்களுக்கான சுய உதவி குழு, திருநங்கைகளுக்கான சுய உதவி குழு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சுய உதவி குழு போன்ற சுய உதவி குழுக்களுக்கு வறுமை ஒழிப்பு நோக்கோடு சுழல் நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் குழுக்களுக்கு ரூ.25,000 மானியத் தொகையாக வழங்கப்படும்.

**vi. சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி**

பழங்குடியினரை உறுப்பினர்களாகக் கொண்ட பெண்களுக்கான சுய உதவி குழு, ஆண்களுக்கான சுய உதவி குழு, இருபாலர்களுக்கான சுய உதவி குழு, திருநங்கைகளுக்கான சுய உதவி குழு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சுய உதவி குழு, மற்றும் விதவைகளுக்கான சுய உதவி குழு போன்ற சுய உதவி

குழுக்களுக்கு வருமானம் ஈட்டக் கூடிய தொழிலினை செய்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் 105 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற 7 குழுக்களுக்கு ரூ.26.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**6. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்**

ஆதிதிராவிடர் இளைஞர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியின் மூலமும் வழங்கப்படுகின்றன.

**தாட்கோ மூலம் நடத்தப்படும் பயிற்சிகள்**

- மல்டிமீடியா &அனிமேஷன் உதவியாளர்
- ஆட்டோகேட் & கட்டடக் கலை மற்றும் உள்நாட்டு 2D வரைவு
- ஃபேஷன் டெக்னாலஜி
- ஆப்பரல் பேட்டர்ன் தயாரித்தல்
- அழகு கலை பயிற்சி
- முடி ஒப்பனையாளர் பயிற்சி
- குளிர்சாதனப் பழுது மற்றும் பராமரிப்பு
- மின் வினைஞர்
- தையல் பயிற்சி
- அழகு கலை வல்லுநர் & முடி ஒப்பனையாளர்
- கணினி வன்பொருள் உதவியாளர்
- சில்லறை விற்பனை
- பொறியாளர் பயிற்சி
- கட்டமைப்பு பொறியியலாளர்
- தொலைத் தொடர்பு பயிற்சி
- சூரிய மின் நிறுவி மற்றும் சேவை
- சுற்றுலா ஏஜென்ட் மற்றும் போக்கு வரத்து பயிற்சி
- கணக்கியல்
- டிக்கெட் முன்பதிவு உதவியாளர்
- கை எம்ப்ராய்டரி
- பிளாஸ்டிக் செயல்முறை

- ஊசி மோல்டிங்
- பிளவு மோல்டிங்
- இயந்திரம் இயக்குபவர் பயிற்சி

**நிதியாண்டு 2013 - 2014 முதல் 2016-2017 வரை 21,391 இளைஞர்களுக்கு 55 நிறுவனங்கள் மூலம் ரூ.30.04 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.**

**7. கட்டுமானப் பிரிவு**

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையைச் சார்ந்த மாணாக்கர்களுக்குப் பள்ளிக் கட்டடங்கள், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பறைகள், சமுதாய நலக் கூடங்கள் கட்டுதல் மற்றும் இத்துறை மக்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**8. மத்திய அரசுப் பணிகள்**

இத்துறை மாணாக்கருக்கென மத்திய அரசின் உதவியுடன் பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடங்கள், ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**9. மாநில அரசுப் பணிகள்**

இத்துறை மாணாக்கர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையக்கட்டடம், தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள், வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள், சுற்றுச் சுவர்கள், சமுதாய நலக்கூடங்கள், கழிப்பறைகள், தார் சாலைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பழங்குடியினர் விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் போன்ற பணிகளுக்கு மாநில அரசு அனுமதி வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**10. நபார்டு திட்டப் பணிகள்**

நடப்பாண்டு 2017-2018நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்திட்டம் (Rural Infrastructure Development Fund) - XIX, XXI, XXII மூலம் இத்துறை பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வறைக் கூடங்கள், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, கழிவறைக் கூடம், விடுதிக் கட்டடங்கள் ஆகிய பணிகளை மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் **666** பணிகள், ரூ.263.69 கோடி மதிப்பில் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான 2017-2018 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 6.86 | 0 | 0 | 6.86 |
| 2 | ஆதி திராவிடர் நலத்துறை | 2808.36 | 200.98 | 0 | 3009.34 |
| 3 | பழங்குடியினர் நலத்துறை | 237.13 | 28.02 | 0 | 265.15 |
| **மொத்தம்** | | **3052.35** | **229** | **0** | **3281.35** |

**வி.எம். ராஜலெட்சுமி**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்